# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,934 — 1970 නොවැම්බර් 27 වැනි සිකුරාදා — 1970.11.27

14,934 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV — உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 357 | வரவு செலவுக் கூற்றுக்கள் | — |
| பதவிகள்—வெற்றிடம் | — | வரவு செலவுத் திட்டங்கள் | 361 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் | — | ஆதன விற்பனைகள் | — |
| துணை விதிகள் | 360 | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | 360 | நானாவித அறிவித்தல்கள் | 362 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### மின்சக்திச் சட்டம்

1957 ம் ஆண்டின் 59 ம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்டபடியான (205 ம் அத்தியாயம்) மின்சக்தி பற்றிய சட்டத்தின் 46 ம் பிரிவின் கீழும், நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சரைக் கலந்தாலோசித்த பின்னர் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல் அமைச்சர் அளித்த அங்கீகாரத்துடனும் கெகல்வத்தைப் பட்டின சபையால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

பி. சிறிவர்தன,
மேலதிக நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக,
உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு நவெம்பர் மீ 15 ந் உ.

#### ஒழுங்கு விதிகள்

1. இவ்வொழுங்கு விதிகளில்—

"சட்டம்" எனில் 1957 ம் ஆண்டின் 59 ம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்ட படியான (205 ம் அத்தியாயமாம்) மின்சக்திச் சட்டம் எனப் பொருள்படும்.

"உத்தரவுப்பத்திரம்" எனில் சட்டத்தின் 2 ம் பிரிவின் கீழ் கெகல்வத்தைப் பட்டின சபைக்கு வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரம் எனப்பொருள்படும்.

"உத்தரவுப்பத்திரக்காரர்" எனில் கெகல்வத்தைப் பட்டின சபை எனப் பொருள்படும்.

2. உத்தரவுப்பத்திரகாரரிடமிருந்து மின்சக்தி பெறவிரும்பும் எவரும்—

(1) விநியோகம் தேவைப்படுவதற்குக் குறைந்தது பதினான்கு நாட்களுக்கு முன்னராவது உத்தரவுப்பத்திரக்காரர் அதற்கென வழங்கும் படிவத்தில் உத்தரவுப்பத்திரக்காரருக்கு விண்ணப்பஞ் செய்ய வேண்டும் ; மேலும்

(2) வழங்கு கம்பிகளுக்கான செலவுகளை உத்தரவுப்பத்திரக்காரருக்கு முற்பணமாகச் செலுத்த வேண்டும், அல்லது உத்தரவுப்பத்திரகாரர் அவ்விதங் கேட்டால், சட்டத்தின் 33 ம் பிரிவின் கீழ் உத்தரவுப் பத்திரதாரருடன் எழுத்திலான ஒரு ஒப்பந்தமும் செய்தல் வேண்டும்.

(3) (அ) உத்தரவுப்பத்திரகாரரின் மின்சக்தி வழங்கு மூலக்கம்பிகளுடன் இணைக்கக்கருதியுள்ள நிறுப்பு எதனதும் கம்பியிடும் வேலையை மின்னெந்திரவியற் பொறியியலாளர்கழகத்தினால் விதிக்கப்பட்ட கம்பியிடுதல் பற்றிய ஒழுங்குவிதிகளுக்கமைய அவ்வேலையைச் செய்து முடிக்கக்கூடியதிறமையுள்ள ஒரு தொழிற்றுபனத்திடம் அல்லது தனியார் ஒருவரிடம் பாவனையாளர் ஒப்படைத்தல் வேண்டும். அவ்வேலையை உத்தரவுப் பத்திரக்காரரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் பரிசோதித்து, பரீட்சித்துப் பார்த்த பின்னரும், அவ்வேலை முன்னே சொல்லப்பட்ட கம்பியிடுதல்பற்றிய ஒழுங்கு விதிகளுக்கமைவாகச் செய்யப்பட்டுள்ளதென உத்தரவுப்பத்திரகாரர் திருப்தியடைந்த பின்னரும் மாத்திரமே அந்நிறுப்புக்கு மின்சக்தி விநியோகம் இணைக்கப்படுதல் வேண்டும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசத்தாருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1970 ம் ஆண்டு யூன் மீ 2 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

(ஆ) அந்நிறுப்பு சொல்லப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கமைவாக இல்லாவிட்டால் அந்நிறுப்பு அவ்வொழுங்கு விதிகளுக்கமைய அமைக்கப்படும்வரையில் அம்மனையகத்துக்கு மின்சக்தி விநியோகம் செய்யப்படமாட்டாது.

4. மின்சக்தி உபயோகிக்கும் ஒவ்வொருவரும் அம்மின்சக்திக்காக உத்தரவுப்பத்திரத்தில் விவரிக்கப்பட்ட விகிதத்தில் பணம் செலுத்த வேண்டும்.

5. (அ) பாவனையாளரின் மனையகத்தில் இருக்கும் சேவைவடக்கம்பிகளின் பாகமும் அம்மின்மாற்றியும், பிரதான பியூஸ்களும், மானியும், தாங்கு பலகையும் உத்தரவுப்பத்திரகாரரின் சொத்துக்களாகவே இருக்கும். எக்காரணத்தைக் கொண்டும் உத்தரவுப்பத்திரக்காரரினால் அதிகாரமளிக்கப்பட்ட அவரது ஊழியரல்லாத எவரும் அவற்றை அகற்றவோ அல்லது தலையிடவோ கூடாது.

(ஆ) பாவனையாளரின் புறத்தில் இருக்கும் உத்தரவுப்பத்திரக்காரரின் பிரதான பியூஸ், மானி ஆகியவற்றின் கம்பிகள், வடக்கம்பிகளையும் வேறு உபகரணங்களையும் பராமரிப்பது பாவனையாளரின் பொறுப்பாகும்.

(இ) சட்டத்தின் 47 (3) ம் பிரிவின்படி துணிக்கப்பட்ட நிறுப்பு ஏதும் மீண்டும் இணைக்கப்பட்டால், அந்நிறுப்பை பரிசோதித்து மீண்டும் இணைப்பதற்குரிய சலார், உத்தரவுப்பத்திரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அறவிடப்படும். அதனைப் பாவனையாளர் முற்பணமாகச் செலுத்திவிடவேண்டும்.

(ஈ) எப்பாவனையாளரதும் கம்பிகளின் அல்லது பொருத்துகளின் சில பாகங்களின் ஒழுங்கு இருக்கும் பட்சத்தில், தமது மனையகத்தின் மானிகாட்டும் சக்திச் செலவு யாவற்றுக்கும் மின்சக்திச் சட்டத்தின் 41 ம் பிரிவிற்கிணங்க அவர் பணஞ் செலுத்தப் பாத்திரராவார்.

6. (அ) தமது மனையகத்துக்கு மின்சக்தி வழங்கப்பட்ட பின்னர், ஏற்கனவே உபயோகித்துவந்ததைவிடப் பெரிய அளவான எந்த விளக்கையும் விசிறியையும் அல்லது மோத்தரையும் உபயோகிக்க அல்லது மேலதி மாக விளக்கெதையும் அல்லது மின்சக்தியைச் செலவிடும் உபகரணம் எதையும் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பொருத்தவோ அல்லது தமது மனையகத்தில் பொருத்தப்பட்டுள்ள கம்பிகளை மாற்றவோ அல்லது விஸ்தரிக்கவோ விரும்பும் பாவனையாளர் ஒவ்வொருவரும், அப்படியான வேலை ஆரம்பிப்பதற்குக் குறைந்தது இரண்டு நாட்களுக்கு முன்னராவது உத்தரவுப்பத்திரக்காரருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

(ஆ) முன்பிருந்ததைவிடப் பெரிய விஸ்தரிப்பு, விளக்கு விசிறி, அல்லது மோத்தர் எதனையும் அல்லது மேலதிக விளக்கு அல்லது சக்தியைச் செலவிடும் வேறு உபகரணம் எதையும் அவ்வித விஸ்தரிப்பு, விளக்கு, விசிறி, மோத்தர், மேலதிக விளக்கு அல்லது வேறு உபகரணத்தை உத்தரவுப்பத்திரக்காரரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் பார்வையிட்டுச் சோதித்துத் திருப்திப்படாதவரையில் எப்பாவனையாளரும், தற்காலிகமாகவேனும் அல்லது நிரந்தரமாகவேனும் பிரதான நிறுப்புடன் இணைக்கவோ இணைக்கச் செய்யவோ அல்லது நிறுவவோ கூடாது.

7. (அ) எவ்வீட்டிலும் உத்தரவுப்பத்திரக்காரரின் பியூஸ் உருகிப் போகும் பட்சத்தில பாவனையாளர் உடனடியாக உத்தரவுப்பத்திரக்காரருடைய விசைநிலைய அல்லது சகவிசை நிலைய, அவ்வதற்கேற்றவாறு பொறுப்பாளருக்கு அறிவிக்க வேண்டும்.

(ஆ) உத்தரவுப்பத்திரக்காரரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் அல்லது வேலையாள் எவரையும் தவிர்ந்த வேறெவரும் உத்தரவுப்பத்திரக்காரரின் சொத்தான உருகிப்போன பியூசை மாற்றக்கூடாது.

(இ) பாவனையாளருக்கு அல்லது உத்தரவுப்பத்திரக்காரருக்கு சொந்தமான பியூஸ் எதனையும் மாற்றுவதற்காக உத்தரவுப்பத்திரக்காரருடைய உத்தியோகத்தர் அல்லது வேலையாள் எவரதும் உதவி அவசியப்பட்டால், உத்தரவுப்பத்திரத்தில் சொல்லப்பட்டவாறான கட்டணம் ஒன்று பாவனையாளரின் அந்த மாதக் கணக்கில் சேர்க்கப்படும்.

8. வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படும் முழு அல்லது பகுதி சக்தி விநியோகத்தடைப்பாட்டினால் உண்டாகும் நஷ்டம் அல்லது சேதம் எதற்கும் உத்தரவுப்பத்திரக்காரர் பாவனையாளருக்குப் பொறுப்பாளியாகமாட்டார்.

9. சட்டத்தின் 45 ம் பிரிவின்படிக்குத் துணிக்கப்பட்டிருந்தபின் ஒரு நிறுப்பு மீண்டும் இணைக்கப்படுமாயின், சோதித்து மீளவும் இணைப்பதற்காக உத்தரவுப்பத்திரத்தில் சொல்லப்பட்டவாறான ஒரு கட்டணத்தை பாவனையாளர் முற்பணமாகக் கொடுத்துவிடவேண்டும்.

10. (அ) கணக்குக் கொடுக்கப்பட்ட திகதியன்றே சகல கட்டணங்களும் கொடுபட வேண்டியனவாகக் கருதப்படும்.

(ஆ) ஒரு கணக்கில் பிழையிருப்பதாகச் செய்யப்படும் முறைப்பாடு எதுவும் பாவனையாளருக்குக் கணக்குக் கொடுக்கப்பட்ட ஒரு கிழமைக்குள் செய்யப்படாவிட்டால் உத்தரவுப்பத்திரக்காரர் அதனை ஏற்கமாட்டார்.

11. (அ) தனது வீட்டுக்கு மின்சக்தி விநியோகம் தேவைப்படாத பாவனையாளர் ஒவ்வொருவரும் உத்தரவுப்பத்திரக்காரருக்கு எழுத்தில் மூன்று முழுநாளைய அறிவித்தல் கொடுக்க வேண்டும்.

(ஆ) (அ) ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்படாதவிடத்து தனது வீட்டிலுள்ள உத்தரவுப்பத்திரக்காரரின் உபகரணங்களுக்குப் பாவனையாளர் பொறுப்பாளியாக இருப்பதுடன், பாவனையாளருக்கு அவ்விநியோகம் தேவையில்லையென உத்தரவுப்பத்திரக்காரருக்கு அறிவித்தல் கிடைத்த தினத்திலிருந்து மூன்று நாட்களுக்கு அவ்வீட்டில் செலவாகிய சக்தி முழுவதற்கும் பணஞ் செலுத்துதற்கும் பொறுப்பாளியாக இருப்பார். எனினும், சொல்லப்பட்ட மூன்று நாட்கள் கடக்கு முன்னர் உத்தரவுப்பத்திரக்காரரால் விநியோகம் துணிக்கப்பட்டால் துணிக்கப்பட்ட நேரம் வரைக்கும் அவ்வீட்டில் செலவான மின்சக்திக்கு மாத்திரமே பாவனையாளர் பணம் செலுத்தப் பாத்திரராவார்.

12. இருந்து வரும் இணைப்புகளுக்கு சேர்த்தல், மாற்றுதல் செம்மைப்படுத்தல் உட்பட்ட மின்சார இணைப்பு வேலை எதனையும் தொடங்குதற்கு இரண்டு நாட்களுக்குக் குறையாத அறிவித்தல் ஒன்றை உத்தரவுப்பத்திரக்காரருக்குக் கொடுத்து உத்தரவுப்பத்திரக்காரரின் ஒரு உத்தியோகத்தர் உத்தேச வேலையைப் பரிசோதிக்க வாய்ப்பளிக்காது தொடங்கக் கூடாது.

13. உத்தரவுப்பத்திரக்காரருக்கு அறிவித்தல் கொடுத்து அவரது முன்னங்கீகாரத்தைப் பெறாது எம்மனையகத்திலும் புதிய இணைப்பு எதற்கும் மின்சார வேலை செய்யப்படின் உத்தரவுப்பத்திரக்காரருக்கு முறைப்படியான அறிவித்தல் கிடைத்து அவசியமான பரிசோதனைகள் செய்யப்படுகின்றவரை, அத்தகைய வேலை செய்யப்பட்டுள்ள மனையகத்துக்கு மின்சக்தி வழங்குதற்கு உத்தரவுப்பத்திரக்காரர் மறுக்கலாம்.

14. உத்தரவுப்பத்திரக்காரரின் மின்சார விநியோக மூலக்கம்பிகளோடு ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ள நிறுப்பு எதற்கும், உத்தரவுப்பத்திரக்காரருக்கு முன்னறிவித்தல் கொடுத்து அனுமதி பெறாமல் விஸ்தரிப்பு ஏதும் செய்யும் பட்சத்தில் அந்நிறுப்பு முற்றாக உத்தரவுப்பத்திரக்காரருடைய மின்சார விநியோக மூலக் கம்பிகளிலிருந்து துண்டிக்கப்படப் பாத்திரமானதாகும்.

15. எந்த நிறுப்பையும் மீண்டும் இணைப்பதற்காக விண்ணப்பம் ஒவ்வொன்றும் உத்தரவுப்பத்திரக்காரர் அதற்கென வைத்துள்ள படிவத்தில் செய்யப்பட்டு மின்சக்தி தேவைப்படுவதற்கு நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குக் குறையாத காலத்துள் உத்தரவுப்பத்திரக்காரரின் காரியாலயத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

16. 22.9.1961 இன் 12,668 ம் இலக்க அரசாங்க கசற்றில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றன

11-1185—27.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,934.

---

## மின்சக்திச் சட்டம்

1957ம் ஆண்டின் 59ம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்டபடியான (205ம் அத்தியாயமாம்) மின்சக்தி பற்றிய சட்டத்தின் 46ம் பிரிவின் கீழும், நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சரைக் கலந்தாலோசித்த பின்னர் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல் அமைச்சர் அளித்த அங்கீகாரத்துடனும் பண்டாரகம பட்டின சபையால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

பி. சிறிவர்தன,
மேலதிக நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு 14.11.1970

### ஒழுங்கு விதிகள்

1. இவ்வொழுங்கு விதிகளில் :—

"சட்டம்" எனில் 1957ம் ஆண்டின் 59 இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்ட படியான (205ம் அத்தியாயமாம்) மின்சத்திச் சட்டம் எனப் பொருள்படும்.

" உத்தரவுப்பத்திரம் " எனில் சட்டத்தின் 2ம் பிரிவின் கீழ் பண்டாரகம பட்டின சபைக்கு வழங்கப்பட்ட உத்தரவுப்பத்திரம் எனப்பொருள்படும்.

" உத்தரவுப்பத்திரக்காரர் " எனில் பண்டாரகம பட்டின சபை எனப் பொருள்படும்.

2. உத்தரவுப்பத்திரகாரரிடமிருந்து மின்சக்தி பெறவிரும்பும் எவரும்—

(1) விநியோகம் தேவைப்படுவதற்குக் குறைந்தது பதினன்கு நாட்களுக்கு முன்னராவது உத்தரவுப்பத்திரக்காரர் அதற்கென வழங்கும் படிவத்தில் உத்தரவுப்பத்திரக்காரருக்கு விண்ணப்பஞ் செய்ய வேண்டும். மேலும்

(2) வழங்கு கம்பிகளுக்கான செலவுகளை உத்தரவுப்பத்திரக்காரருக்கு முற்பணமாகச் செலுத்த வேண்டும், அல்லது உத்தரவுப்பத்திர காரர் அவ்விதங் கேட்டால், சட்டத்தின் 33ம் பிரிவின் கீழ் உத்தரவுப் பத்திரகாரருடன் எழுத்திலான ஒரு ஒப்பந்தமும் செய்தல் வேண்டும்.

(3) (அ) உத்தரவுப்பத்திரகாரரின் மின்சக்தி வழங்கு மூலக்கம்பிகளுடன் இணைக்கக்கருதியுள்ள நிறுப்பு எதனதும் கம்பியிடும் வேலையை மின்னெந்திரவியற் பொறியியலாளர் கழகத்தினுல் விதிக்கப்பட்ட கம்பியிடுதல் பற்றிய ஒழுங்குவிதிகளுக்கமைய அவ்வேலையைச் செய்து முடிக்கக்கூடிய திறமையுள்ள ஒரு தொழிற்றுபனத்திடம் அல்லது தனியார் ஒருவரிடம் பாவனையாளர் ஒப்படைத்தல் வேண்டும். அவ்வேலையை உத்தரவுப் பத்திரக்காரரினுல் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் பரிசோதித்து, பரீட்சித்துப்பார்த்த பின்னரும், அவ்வேலை முன்னே சொல்லப்பட்ட கம்பியிடுதல்பற்றிய ஒழுங்கு விதிகளுக்கமைவாகச் செய்யப்பட்டுள்ளதென உத்தரவுப்பத்திரகாரர் திருப்தியடைந்த பின்னரும் மாத்திரமே அந்நிறுப்புக்கு மின்சக்தி விநியோகம் இணைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) அந்நிறுப்பு சொல்லப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கமைவாக இல்லாவிட்டால் அந்நிறுப்பு அவ்வொழுங்கு விதிகளுக்கமைய அமைக்கப்படும்வரையில் அம்மனையகத்துக்கு மின்சக்தி விநியோகம் செய்யப்படமாட்டாது.

4. மின்சக்தி உபயோகிக்கும் ஒவ்வொருவரும் அம்மின்சக்திக்காக உத்தரவுப்பத்திரத்தில் விவரிக்கப்பட்ட விகிதத்தில் பணம் செலுத்த வேண்டும்.

5. (அ) பாவனையாளரின் மனையகத்தில் இருக்கும் சேவைவடக்கம்பிகளின் பாகமும் அம்மின்மாற்றியும், பிரதான பியூஸ்களும், மானியும் தாங்கு பலகையும் உத்தரவுப்பத்திரகாரரின் சொத்துக்களாகவே இருக்கும். எக்காரணத்தைக் கொண்டும் உத்தரவுப்பத்திரக்காரரினுல் அதிகாரமளிக்கப்பட்ட அவரது ஊழியரல்லாத எவரும் அவற்றை அகற்றவோ அல்லது தலையிடவோ கூடாது.

(ஆ) பாவனையாளரின் புறத்தில் இருக்கும் உத்தரவுப்பத்திரக்காரரின் பிரதான பியூஸ், மானி ஆகியவற்றின் கம்பிகள், வடக்கம்பிகளையும் வேறு உபகரணங்களையும் பராமரிப்பது பாவனையாளரின் பொறுப்பாகும்.

(இ) சட்டத்தின் 47 (3) ம் பிரிவின்படி துணிக்கப்பட்ட நிறுப்பு ஏதும் மீண்டும் இணைக்கப்பட்டால், அந்நிறுப்பை பரிசோதித்து மீண்டும் இணைப்பதற்குரிய சலார், உத்தரவுப்பத்திரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அறவிடப்படும். அதனைப் பாவனையாளர் முற்பணமாகச் செலுத்திவிட வேண்டும்.

(ஈ) எப்பாவனையாளரதும் கம்பிகளின் அல்லது பொருத்துகளின் சில பாகங்களின் ஒழுங்கு இருக்கும் பட்சத்தில் தமது மனையகத்தின் மானிகாட்டும் சக்திச் செலவு யாவற்றுக்கும் மின்சக்திச் சட்டத்தின் 41 ம் பிரிவிற்கிணங்க அவர் பணஞ் செலுத்தப் பாத்திரராவார்.

6. (அ) தமது மனையகத்துக்கு மின்சக்தி வழங்கப்பட்ட பின்னர் ஏற்கனவே உபயோகித்துவந்ததைவிடப் பெரிய அளவான எந்த விளக்கையும் விசிறியையும் அல்லது மோத்தரையும் உபயோகித்த அல்லது மேலதிகமாக விளக்கெதையும் அல்லது மின்சக்தியைச் செலவிடும் உபகரணம் எதையும் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பொருத்தவோ அல்லது தமது மனையகத்தில் பொருத்தப்பட்டுள்ள கம்பிகளை மாற்றவோ அல்லது விஸ்தரிக்கவோ விரும்பும் பாவனையாளர் ஒவ்வொருவரும், அப்படியான வேலை ஆரம்பிப்பதற்குக் குறைந்தது இரண்டு நாட்களுக்கு முன்னராவது உத்தரவுப்பத்திரக்காரருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

(ஆ) முன்பிருந்ததைவிடப் பெரிய விஸ்தரிப்பு, விளக்கு, விசிறி அல்லது மோத்தர் எதனையும் அல்லது மேலதிக விளக்கு அல்லது சக்தியைச் செலவிடும் வேறு உபகரணம் எதையும் அவ்வித விஸ்தரிப்பு, விளக்கு, விசிறி, மோத்தர், மேலதிக விளக்கு அல்லது வேறு உபகரணத்தை உத்தரவுப்பத்திரக்காரரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் பார்வையிட்டுச் சோதித்துத் திருப்திப்படாதவரையில் எப்பாவனையாளரும், தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாக வேனும் பிரதான நிறுப்புடன் இணைக்கவோ இணைக்கச் செய்யவோ அல்லது நிறுவவோ கூடாது.

7. (அ) எவ்வீட்டிலும் உத்தரவுப்பத்திரக்காரரின் பியூஸ் உருகிப் போகும் பட்சத்தில் பாவனையாளர் உடனடியாக உத்தரவுப் பத்திரக்காரருடைய விசைநிலைய அல்லது சகவிசை நிலைய, அவ்வதற்கேற்றவாறு பொறுப்பாளருக்கு அறிவிக்க வேண்டும்.

(ஆ) உத்தரவுப்பத்திரக்காரரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் அல்லது வேலையாள் எவரையும் தவிர்ந்த வேறெவரும் உத்தரவுப்பத்திரகாரரின் சொத்தான உருகிப் போன பியூசை மாற்றக்கூடாது.

(இ) பாவனையாளருக்கு அல்லது உத்தரவுப்பத்திரக்காரருக்கு சொந்தமான பியூஸ் எதனையும் மாற்றுவதற்காக உத்தரவுப் பத்திரக்காரருடைய உத்தியோகத்தர் அல்லது வேலையாள் எவரதும் உதவி அவசியப்பட்டால், உத்தரவுப்பத்திரத்தில் சொல்லப்பட்டவாறுன கட்டணம் ஒன்று பாவனையாளரின் அந்த மாதக் கணக்கில் சேர்க்கப்படும்.

8. வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படும் முழு அல்லது பகுதி சக்தி விநியோகத்தடைப்பாட்டினுல் உண்டாகும் நஷ்டம் அல்லது சேதம் எதற்கும் உத்தரவுப்பத்திரக்காரர் பாவனையாளருக்குப் பொறுப்பாளியாகமாட்டார்.

9. சட்டத்தின் 45 ம் பிரிவின்படிக்குத் துணிக்கப்பட்டிருந்தபின் ஒரு நிறுப்பு மீண்டும் இணைக்கப்படுமாயின், சோதித்து மீளவும் இணைப்பதற்காக உத்தரவுப்பத்திரத்தில் சொல்லப்பட்டவாறுன ஒரு கட்டணத்தைப் பாவனையாளர் முற்பணமாகக் கொடுத்துவிட வேண்டும்.

10. (அ) கணக்குக் கொடுக்கப்பட்ட திகதியன்றே சகல கட்டணங்களும் கொடுபட வேண்டியனவாகக் கருதப்படும்.

(ஈ) ஒரு கணக்கில் பிழையிருப்பதாகச் செய்யப்படும் முறைப்பாடு எதுவும் பாவனையாளருக்குக் கணக்குக் கொடுக்கப்பட்ட ஒரு கிழமைக்குள் செய்யப்படாவிட்டால் உத்தரவுப்பத்திரக் காரர் அதனை ஏற்கமாட்டார்.

11. (அ) தனது வீட்டுக்கு மின்சக்தி விநியோகம் தேவைப்படாத பாவனையாளர் ஒவ்வொருவரும் உத்தரவுப்பத்திரக்காரருக்கு எழுததில் மூன்று முழு நாளைய அறிவித்தல் கொடுக்க வேண்டும்.

(ஆ) (அ) ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அறிவித்தல் கொடுக்கப் படாதவிடத்து தனது வீட்டிலுள்ள உத்தரவுப்பத்திரக்காரரின் உபகரணங்களுக்குப் பாவனையாளர் பொறுப்பாளியாக இருப்பதுடன், பாவனையாளருக்கு அவ்விநியோகம் தேவையில்லையென உத்தரவுப்பத்திரக்காரருக்கு அறிவித்தல் கிடைத்த தினத்திலிருந்து மூன்று நாட்களுக்கு அவ்வீட்டில் செலவாகிய சக்தி முழுவதற்கும் பணஞ் செலுத்துதற்குப் பொறுப்பாளியாக இருப்பார். எனினும், சொல்லப்பட்ட மூன்று நாட்கள் கடக்கு முன்னர் உத்தரவுப் பத்திரக்காரரால் விநியோகம் துணிக்கப்பட்டால் துணிக்கப்பட்ட நேரம் வரைக்கும் அவ்வீட்டில் செலவான மின்சக்திக்கு மாத்திரமே பாவனையாளர் பணம் செலுத்தப் பாத்திரராவார்.

12. இருந்து வரும் இணைப்புகளுக்கு சேர்த்தல், மாற்றுதல், செம்மைப்படுத்தல் உட்பட்ட மின்சார இணைப்புவேலை எதனையும் தொடங்குதற்கு இரண்டு நாட்களுக்குக் குறையாத அறிவித்தல் ஒன்றை உத்தரவுப் பத்திரக்காரருக்குக் கொடுத்து உத்தரவுப்பத்திரக்காரரின் ஒரு உத்தியோகத்தர் உத்தேச வேலையைப் பரிசோதிக்க வாய்ப்பளிக்காது தொடங்கக் கூடாது.

13. உத்தரவுப்பத்திரக்காரருக்கு அறிவித்தல் கொடுத்து அவரது முன்னங்கீகாரத்தைப் பெறுது எம்மனையகத்திலும் புதிய இணைப்பு எதற்கும் மின்சார வேலை செய்யப்படின் உத்தரவுப்பத்திரக்காரருக்கு முறைப்படியான அறிவித்தல் கிடைத்து அவசியமான பரிசோதனைகள் செய்யப்படுகின்றவரை, அத்தகைய வேலை செய்யப்பட்டுள்ள மனையகத்திற்கு மின்சக்தி வழங்குதற்கு உத்தரவுப்பத்திரக்காரர் மறுக்கலாம்.

14. உத்தரவுப்பத்திரக்காரரின் மின்சார விநியோக மூலக்கம்பிகளோடு ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ள நிறுப்பு எதற்கும், உத்தரவுப் பத்திரக்காரருக்கு முன்னறிவித்தல் கொடுத்து அனுமதிபெருமல் விஸ்தரிப்பு ஏதும் செய்யும் பட்சத்தில் அந்நிறுப்பு முற்றாக உத்தரவுப்பத்திரக்காரருடைய மின்சார விநியோக மூலக்கம்பிகளிலிருந்து துண்டிக்கப்படப்பாத்திரமானதாகும்.

15. எந்த நிறுப்பையும் மீண்டும் இணைப்பதற்காக விண்ணப்பம் ஒவ்வொன்றும் உத்தரவுப்பத்திரக்காரர் அதற்கென வைத்துள்ள படிவத்தில் செய்யப்பட்டு மின்சக்தி தேவைப்படுவதற்கு நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குக் குறையாத காலத்துள் உத்தரவுப்பத்திரக்காரரின் காரியாலயத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

11–1145—27.11.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,934

## பாத்ததேறவாஹெற்ற கந்தஹாயா தெற்கு 1 ம் இலக்கக் கிராமச் சபை

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

### விசேட தண்ணீர் வரி

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 40 ஆ ஆம் பிரிவின் கீழும் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வழங்கிய அனுமதியுடனும் துணை விதிகளினால் விதிக்கப்படக்கூடியனவாய வரம்புகளுக்கும் விலக்குகளுக்கும் அமைவாகவும் சபையினால் பரிபாலிக்கப்படுந் தண்ணீர்ச் சேவையினால் பயனடையும் பிரதேசத்தினுள் அமைந்துள்ள கட்டிடங்கள், காணிகள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு நான்கு வீதமானதும் ஒவ்வொரு ஆண்டின் மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட தண்ணீர் வரியை ஒவ்வொரு ஆண்டுக்கும் பாத்ததேறவாஹெற்றக் கிராமச் சபை விதித்திருக்கிறதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஜீ. சிறிவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம்,
உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு நவெம்பர் மீ 16 ந் உ.

11-1189—27.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,934.

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

### 13 ஆம் பிரிவின்படியான அறிவித்தல்

1961 ம் ஆண்டின் 60 ம் இலக்க கிராமச் சபைகள் (திருத்தம்) அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 13 (1) ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பலத்தைக் கொண்டு மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பேட்றம் ஆணல்ட் ஜெயராசா காசிநாதர் ஆகிய நான் மட்டக்களப்பு மாவட்டத்து புதுக்குடியிருப்பு கிராமச் சபையின் 5 ம் வட்டார உறுப்பினர் திரு. பொன்னையா சின்னத்தம்பி அவருடைய தெரிவின் பின்னர், சபைக்கு அறிவிக்காமல் சபையின் அடுத்தடுத்த மூன்றுக்கு மேற்பட்ட கூட்டங்களுக்குச் செல்லவில்லை என்பதை நிச்சயமாய் அறிந்து மட்டக்களப்பு மாவட்டத்துப் புதுக்குடியிருப்பு கிராமச் சபையின் 5 ம் இலக்க வட்டார உறுப்பினர் திரு. பொன்னையா சின்னத்தம்பி இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதியிலிருந்து உறுப்பினர் பதவியை விட்டு நீங்கியுள்ளார் என்று இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

பீ. ஏ. ஜே. காசிநாதர்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
மட்டக்களப்பு.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
மட்டக்களப்பு,
1970.10.27.

11-156—27.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,934

---

# துணை விதிகள்

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் குருநாகல் மாவட்டத்திலுள்ள ரம்பொடகல்லேக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பலத்தைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

பி. சிரிவர்த்தன,
மேலதிக நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு நொவம்பர் மீ 18 ந் உ.

### துணைவிதிகள்

1. குருநாகல் மாவட்டத்திலுள்ள ரம்பொடகல்லேக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சந்தைகளும் முறைச் சந்தைகளும் சம்பந்தமாக நியமத்துணைகளின் 27 ம் பாகத்தின் 1 ம் துணைவிதியின் நோக்கத்துக்கு கட்டுப்பிலகொல்லேச் சந்தைக்கான சந்தைப் பிரதேசம் அச் சந்தையிலிருந்து ¼ மைல் ஆரையைக் கொண்ட ஒரு வட்டத்துள் அடங்கிய பிரதேசமாதல் வேண்டும்.

2. கட்டுப்பிலகொல்லே சந்தையிலுள்ள இடம் அல்லது கடை எதனையும் உபயோகிப்பதற்கு அல்லது ஆட்சி பண்ணுவதற்கு பின்வரும் வீதங்களின்படி கட்டணமொன்று விதிக்கப்பட்டுக்கொடுபடுதல் வேண்டும்.

| | | நாளொன்றுக்கு ரூ. ச. |
|---|---|---|
| 1. | ஒவ்வொரு கடைக்கும் .. .. | 1 00 |
| 2. | 4 சதுர அடிக்கு மேற்படாத தளப்பரப்பின் ஒவ்வொரு பாகத்துக்கும் .. .. .. | 0 10 |
| 3. | 4 சதுர அடிக்கு மேற்பட்டதும் ஆனால் 20 சதுர அடிக்கு மேற்படாததுமான தளப்பரப்பின் ஒவ்வொரு பாகத்துக்கும் .. .. .. | 0 30 |
| 4. | 30 சதுர அடிக்கு மேற்படாத தளப்பரப்பு ஒவ்வொரு பாகத்துக்கும் .. .. .. | 0 50 |
| 5. | 50 சதுர அடிக்கு மேற்படாத தளப்பரப்பின் ஒவ்வொரு பாகத்துக்கும் .. .. .. | 0 75 |
| 6. | 100 சதுர அடிக்கு மேற்படாத தளப்பரப்பின் ஒவ்வொரு பாகத்துக்கும் .. .. .. | 1 00 |

3. திறந்த வெளியிலுள்ள இடத்துக்கு பின்வரும் வீதங்களின்படி கட்டண மொன்று விதிக்கப்பட்டுக் கொடுபடுதல் வேண்டும் :—

| | | |
|---|---|---|
| (அ) | 8 சதுர அடிக்கு மேற்படாத தளப்பரப்பின் ஒவ்வொரு பாகத்துக்கும் .. .. | 0 20 |
| (ஆ) | 8 சதுர அடிக்கு மேற்பட்டதும் ஆனால் 25 சதுர அடிக்கு மேற்படாத தளப்பரப்பின் ஒவ்வொரு பாகத்துக்கும் .. .. | 0 30 |
| (இ) | 25 சதுர அடிக்கு மேற்பட்டதும் ஆனால் 50 சதுர அடிக்கு மேற்படாததுமான தளப்பரப்பின் ஒவ்வொரு பாகத்துக்கும் .. | 0 40 |
| (ஈ) | 50 சதுர அடிக்கு மேற்பட்டதும் ஆனால் 100 சதுர அடிக்கு மேற்படாததுமான தளப்பரப்பின் ஒவ்வொரு பாகத்துக்கும் .. .. | 0 50 |

11-1199—27.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,934

---

# உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

## உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம்

### (அத்தியாயம் 262)

திரு. கே. என். டபிள்யூ. அபேசேகர (262 ஆம் அத்தியாயமான), உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 4 (1) (சி) பிரிவின் கீழ், 1970, நவெம்பர் 11 இல் இருந்து காலி மாவட்டத்து உதவித் தேர்தல்கள் உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளாரென்று, இத்தால், பொதுத் தகவலுக்காக அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எவ். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்).

கொழும்பு 7,
1970 ம் ஆண்டு நவெம்பர் மீ 12 ந் உ.

11-1188—27.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,934.

## உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)

### கேகாலை மாவட்டம்

### தெதிகம கிராமச் சபை

கெமலாகே டிங்கிரி அப்புகாமி என்பவர் தெதிகம கிராமச் சபையின் 6 ஆம் இலக்க வட்டாரப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளாரென (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 66 (2) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எப். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்).

கொழும்பு,
1970 ம் ஆண்டு நவெம்பர் மீ 16 ந் உ.

11-1175—27.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,934

---

# வரவு செலவுத் திட்டங்கள்

## பண்டத்தரிப்பு பட்டண சபை

### பட்டண சபைகள் நிதிப்பிரமாணம் 40 (ii) ன் கீழ் முதலாவது விண்ணப்பம்—வரவு செலவுத் திட்டம்—1970

21.10.70 ல் நடைபெற்ற கூட்டத்தீர்மான இலக்கம் 11 ன் பிரகாரம் யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் திருத்தத்திற்கமைய ஒதுக்கிய ஈக்குப் பணத்திலிருந்து பின்வருமாறு சேமித்த தொகையை தொடர்பான மற்றைய வாக்குகளில் தேவைப்படும் மேலதிக தொகையை பின்வரும் மேப்படி ஈடுசெய்தற் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### பகுதி 1—பொது விபரங்கள்

**சேமிப்பு**

| | | | |
|---|---|---|---|
| " ஏ " | 2 | (ஔ) விவாகமானவர்களுக்குப் படிகள் .. | 110 00 |
| | 4 | நன்கொடைகளும் உதவு தொகைகளும் .. | 740 00 |
| " பி " | 2 | பராமரிப்பு .. .. .. | 2,775 00 |
| " ஜி " | 1 | ஊதியம் .. .. .. | 2,378 00 |
| " ஐ " | 3 | (உ) மலகூடங்கள் பராமரிப்பு .. | 500 00 |
| " ஜீ " | 1 | நாய் அழித்தல் .. .. | 500 00 |
| " யே " | 1 | சம்பளம் .. .. .. | 600 00 |
| | 3 | புத்தகங்களும் பருவ வெளியீடுகளும் .. | 152 00 |
| | 4 | தளபாடம் .. .. .. | 500 00 |
| | | | 8,255 00 |

**மேலதிகச் செலவு**

| | | | | |
|---|---|---|---|---|
| " ஏ " | 1 | (ஆ) | எழுது வினைஞர் .. .. | 1,300 00 |
| | 1 | (இ) | வருமானப் பரிசோதகர்கள் .. | 40 00 |
| | 2 | (அ) | படிகள் வேறு எவ்விதமும் காட்டப்படாதது | 15 00 |
| | 2 | (ஆ) | பிரயாண செலவுகள் .. .. | 500 00 |
| | 2 | (இ) | வரி வசூலிப்போர் தரகு .. | 500 00 |
| | 2 | (ஐ) | இடைநேரச் செலவு .. .. | 100 00 |
| | 2 | (ஓ) | அலுவலக தளபாடங்கள் .. | 1,000 00 |
| " டீ " | 1 | (ஏ) | வடிகால் அமைப்பு .. .. | 2,000 00 |
| | 4 | (ஈ) | நிர்மாணித்தல் .. .. | 700 00 |
| | 7 | (ஆ) | பராமரிப்பு .. .. | 1,600 00 |
| | 7 | (இ) | அச்சிடுதல் .. .. | 500 00 |
| | | | | 8,255 00 |

ஜே. சூசைப்பிள்ளை,
தலைவர், பட்டண சபை,
பண்டத்தரிப்பு.

பட்டண சபை அலுவலகம்,
பண்டத்தரிப்பு,
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 23 ந் உ.

அனுமதிக்கப்பட்டது.

ஏ. ஏ. யோசேப்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்.
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சி அமைச்சு,
யாழ்ப்பாணம்,
1970 ம் ஆண்டு நவம்பர் மீ 17 ந் உ.

11-1101/2—27.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,934

---

## பண்டத்தரிப்பு பட்டண சபை

### 1 வது உபாங்க வரவு செலவுத் திட்டம்—1970

### பகுதி II மின்னியல் பகுதி

**செலவினத் தலைப்புகள்**

| | | |
|---|---|---|
| | | ரூ. ச. |
| 3. | மின் சக்திச் சேவையும் வீட்டு இணைப்புகளும் | |
| | (அ) பொருட்கள் .. .. .. | 15,000 00 |

ஜே. சூசைப்பிள்ளை,
தலைவர்,
பட்டணசபை, பண்டத்தரிப்பு.

பட்டண சபை அலுவலகம்,
பண்டத்தரிப்பு.
1970 ம் ஆண்டு ஒற்றோபர் மீ 30 ந் உ.

சரிபார்க்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

ஏ. ஏ. யோசேப்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சி அமைச்சு,
யாழ்ப்பாணம்,
1970 ம் ஆண்டு நவம்பர் மீ 17 ந் உ.

11-1101/3—27.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,934

## திருத்தம்

**பண்டத்தரிப்பு பட்டண சபை வரவு செலவுத் திட்டம்–1970**

26.12.69 ல் 14,886 இலக்க வர்த்தமானியில் பகுதி II மின்னியல் பகுதி செலவினத் தலைப்பு 12 ல் இடைக்கால வேதனம் ரூபா 390.00 என்பதை, 13. விவாகமானவர்களுக்குப் படிகள் எனத் திருத்தப்படல் வேண்டும்.

ஜே. சூசைப்பிள்ளை,
தலைவர், பட்டண சபை,
பண்டத்தரிப்பு.

பட்டணசபை அலுவலகம்,
பண்டத்தரிப்பு,
1970 ம் ஆண்டு ஒற்றோபர் மீ 23 ந் வ.

அனுமதிக்கப்பட்டது.

ஏ. ஏ. யோசேப்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சி அமைச்சு,
யாழ்ப்பாணம்,
1970 ம் ஆண்டு நவம்பர் மீ 17 ந் வ.

11–1101/4—27.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,934

---

# நானாவித அறிவித்தல்கள்

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

**ஊன்வினைஞர் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 272)**

ஊன்வினைஞர் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 272) 17 (1) ம் பிரிவின் கீழ் எனக்கு உரிமையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் காரண மாக, யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத் தின் முதல்வராகிய தாமோதரம்பிள்ளை சபாபதிப்பிள்ளை துரைராஜா ஆகிய யான், தகுந்த அதிகாரியாக இருப்பதால், இதன்கீழ் குறிப்பிடப் பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில், 1971 ம் வருடத்தில், யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற நிர்வாக எல்லைக்குள் மிருகங்களைக் கொல்வதை அல்லது இறைச்சியின் விற்பனையை அல்லது விற்பனைக்கான இறைச்சியை பார்வைக்கு வெளிக்காட்டுவதை இத்தால் தடை செய்கின்றேன்.

**அட்டவணை**

| | |
|---|---|
| ஜனவரி 1971 .. | .. 1, 8, 15, 22, 29 |
| பெப்ருவரி 1971 .. | .. 5, 12, 19, 23, 26 |
| மார்ச் 1971 .. | .. 5, 12, 19, 26 |
| எப்பிரல் 1971 .. | .. 2, 9, 16, 23, 30 |
| மே 1971 .. | .. 7, 14, 21, 28 |
| ஜூன் 1971 .. | .. 4, 11, 18, 25 |
| ஜூலை 1971 .. | .. 2, 9, 16, 23, 30 |
| ஆகஸ்ட், 1971 .. | .. 6, 13, 20, 27 |
| செப்டம்பர், 1971 | .. 3, 10, 17, 24 |
| அக்டோபர் 1971 | .. 1, 8, 15, 22, 29 |
| நவம்பர் 1971 .. | .. 5, 12, 19, 26 |
| டிசம்பர் 1971 .. | .. 3, 10, 17, 24, 31 |

தா. ச. துரைராஜா,
முதல்வர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்றம்,
யாழ்ப்பாணம்,
1970 ம் ஆண்டு நவெம்பர் மீ 16 ந் வ.

11–1190—27.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,934

---

## ஏறாவூர் பட்டின சபை

**கசாப்புக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்**

கசாப்புக்காரர் பற்றிய சட்டத்தின் அத்தியாயம் 272 ன் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ்க் காணும் அட்டவணையிற் காணப்படும் பேர் வழிக்காரர்களிடமிருந்து 1970 ம் ஆண்டிற்கு கசாப்புத் தொழில் நடாத்த அனுமதிக்கும்படி விண்ணப்பம் கிடைத்திருக்கின்றது.

இந்தப் பட்டின சபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் குறிக்கப் படும் அனுமதி வழங்குவதை மறுக்கவிரும்பினால், மறுப்பிற்கான காரணங்களை இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் இணைப் பிரதிகளில் எனக்கு அனுப்பிவைக்கும்படி இத்தால் வேண்டப் படுகின்றன.

எம். ஏ. சி. ஏ. றகுமான்,
தலைவர்,
பட்டின சபை, ஏறாவூர்.

பட்டின சபை அலுவலகம்,
ஏறாவூர், 30.10.70.

**அட்டவணை**

| விண்ணப்பக்காரரின் பெயர், விலாசம் | வியாபாரம் செய்யவிருக்கும் இடத்தின் பெயர், விலாசம் |
|---|---|
| 1. வை. அபுசாலி, 3 ம் குறிச்சி, ஏறாவூர் .. | 39, புன்னைக்குடா றோட், ஏறாவூர் |
| 2. சீனித்தம்பி உமர்லெவ்வை, 1ம் குறிச்சி, ஏறாவூர் | 33, புன்னைக்குடா றோட், ஏறாவூர் |

11–765—27.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,934

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப போதிய அவகாசம் கொடுபபது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர்,** தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

### அட்டவணை—1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| நவெம்பர் .. | 5.11.70 | வியாழன் .. | 30.10.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 12.11.70 | வியாழன் .. | 5.11.70 | வியாழன் .. | த.ப. | 12.00 |
| | 20.11.70 | வெள்ளி .. | 12.11.70 | வியாழன் .. | த.ப. | 12.00 |
| | 27.11.70 | வெள்ளி .. | 20.11.70 | வெள்ளி .. | த.ப. | 12.00 |
| திசெம்பர் .. | 4.12.70 | வெள்ளி .. | 27.11.70 | வெள்ளி .. | த.ப. | 12.00 |
| | 11.12.70 | வெள்ளி .. | 4.12.70 | வெள்ளி .. | த.ப. | 12.00 |
| | 18.12.70 | வெள்ளி .. | 10.12.70 | வியாழன் .. | பி.ப. | 3.30 |
| | 24.12.70 | வியாழன் .. | 17.12.70 | வியாழன் .. | பி.ப. | 3.30 |
| | 31.12.70 | வியாழன் .. | 24.12.70 | வியாழன் .. | பி.ப. | 3.30 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு.
1970 ஆம் ஆண்டு யூன் மீ 2 ஆந் உ

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
**அரசாங்க அழுத்தகர்.**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.